REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 25உ வியாழன் (7—4—55) ★ ★ வெளியூர்: பங்குனி 26உ வெள்ளி (8—4—55) [இதழ் 253

'தேசிய வார'ங்கள் கட்டுப்படுத்தப்படும்

பம்பாய் மாநிலத்தில், இனி, 'சர்தியார் வாரம்,' 'மதுவிலக்கு வாரம்,' என இரு தேசிய வாரங்கள்தான் கொண்டாடப்பட வேண்டுமென அரசாங்கம் உத்திரவிடும் என்று தெரியவருகிறது.

உடற்பயிற்சிக் கல்வி வாரம், சமூகக் கல்வி வாரம், மரம் பயிரிடும் வாரம், அதிக உணவு உற்பத்தி செய்யும் வாரம், தேசிய விளையாட்டு வாரம்—என இப்போது நடத்தப்பட்டுவரும் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேசிய வாரங்களைக் கட்டுப்படுத்தி, இனி அந்த வாரங்களெல்லாம் ஒரிரண்டாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் சர்க்கார் கருதுவதாகக் கூறப்படுகிறது.

ஏழை மாணவர் கல்வி நிதிக்கு ரூ. 5,000

நிதி மந்திரி சுப்பிரமணியம் தலைமையில் டெல்லி ஆட்சியாளர் கூட்டுகின்றனர்!

இந்தி மொழி மட்டும்தான் போட்டிப் பரீட்சை மொழியாகும்

மக்கள் சபையில் பண்டித பந்த் தகவல்

புதுடில்லி, ஏப். 6—

ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியைப் புகுத்துவதற்கு முதல் படியாக, அகில இந்திய 'சர்விஸ்'களுக்கான பரீட்சைகளில், 1960-ல், இந்தி மொழியும் பரீட்சைக்கான ஒரு விருப்ப மொழியாக இடம் பெறும். மற்றொரு விருப்ப மொழியாக ஆங்கிலம் இருக்கும்.

1960 முதல் 1964 வரை, வாய்மொழிப் பரீட்சைகள் எல்லாம், ஆங்கிலம் அல்லது பரீட்சைக்குரியோர் விரும்பும் வேறு எந்த மொழியிலும் நடத்தப்பட வேண்டும்.

1965 முதல் இந்தி மொழியில் மட்டுந்தான் எல்லாப் பரீட்சைகளும்—வாய்மொழிப் பரீட்சைகள் உட்பட—நடத்தப்பட வேண்டும்.

1965-க்குப் பிறகு இந்திய அரசியல் சட்டம் 8-வது 'ஷெட்யூலி'ல் காணப்படுகிற ஏதாவது ஒரு மொழியை கட்டாய பாடமாகவும், போட்டிப் பாடமாகவும் புகுத்த வேண்டும்.

1965-க்குப் பிறகு இந்திய மொழிகளல்லாத குறிப்பிடப்பட்டுள்ள ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய, சீன, ஜப்பா

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

****

தலைமைக் கழகம் : அறிக்கை—10/55

புதிய மாவட்டப் பகுப்பு

வேறு முடிவுகள் எடுக்கப்படும் வரையில், இதுகாறும் தெளிவுபடுத்தப்படாத கீழ்க்கண்ட பகுதிகள், கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களைச் சேர்ந்தவைகளாகக் கருதப்படும் :—

நாஞ்சில் மாவட்டம் : திரு—கொச்சி ஆட்சி நிலப் பகுதியில் உள்ள தி. மு. கழகக் கிளைகளெல்லாம் நாஞ்சில் மாவட்டம் என்ற பெயரில் அமைந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகளாகக் கருதப்படும்.

பெங்களூர் மாவட்டம் : மைசூர் ஆட்சி நிலப் பகுதியில் உள்ள தி. மு. கழகக் கிளைகளெல்லாம் பெங்களூர் மாவட்டம் என்ற பெயரில் அமைந்த மாவட்டத்தைச்சேர்ந்த கிளைகளாகக் கருதப்படும்.

சித்தூர் மாவட்டம் : ஆந்திரா ஆட்சி நிலப்பகுதியில் உள்ள தி. மு. கழகக் கிளைகளெல்லாம் சித்தூர் மாவட்டம் என்ற பெயரில் அமைந்த மாவட்டத்தைச்சேர்ந்த கிளைகளாகக் கருதப்படும்.

இந்த மாவட்டங்களெல்லாம் தமிழகத்திலுள்ள மாவட்டங்கள் எத்தகைய சட்டதிட்டங்களின்படி இயங்குகின்றனவோ, அதே சட்டதிட்டங்களின்படி இயங்க வேண்டும். ஆனால், பொதுக்குழுவிற்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் முறையில்மட்டும் பெங்களூர், சித்தூர் மாவட்டங்கள் கீழ்க்கண்ட முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் :—

பெங்களூர் மாவட்டம் இரண்டு பிரதிநிதிகளையும், சித்தூர் மாவட்டம் இரண்டு பிரதிநிதிகளையும் பொதுச்செயலாளரிடம் சிபாரிசு செய்யலாம். பொதுச்செயலாளர், அவர்களை பொதுக்குழு உறுப்பினர்களாக நியமித்துக்கொள்வார்.

பெங்களூர் மாவட்டமும், சித்தூர் மாவட்டமும் நல்ல முறையில் உருவாக்கப்பட வேண்டியவைகளாக இருப்பதால், அவற்றின் தேர்தல் புதிய பொதுக்குழு அமைந்ததற்குப் பிறகு கவனிக்கப்படும்.

"அறிவகம்" சென்னை.
7—4—55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

****

ஈரான் பிரதமர் ராஜினமா

ஈரான் பிரதமர் ஜெனரல் பஸ்லுல்லா சகேதி தனது பதவியை ராஜினமாச் செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஈரான் மன்னர் ஷா, நீதி மன்ற மந்திரியாயிருந்த உசேன் ஆயா என்பவரை பிரதம மந்திரியாக நியமித்திருக்கிறார்.

சகேதி, கடந்த 1953-ம் ஆண்டு ஆகஸ்டு 23-ந் தேதி முதல், பிரதமராக இருந்து வருகிறார். உலக மார்க்கெட்டில் மீண்டும் பாரசீக எண்ணெய் கிடைக்க அனுமதி அளித்தவர் அவர்தான்.

டாக்டர் முசம்மது முசாதீக்கை பதவியிலிருந்து விலக்கிவிட்டு, ஷா

****

தலைமைக் கழகம்: அறிக்கை-9/55

தேர்தல் ஒத்திவைப்பு

★

பின்னால் ஆராயப்பட்டுக் கவனிக்கப்படும் நோக்கத்துடன் தேர்தலும், நடவடிக்கைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ள கிளைகள் வருமாறு :—

1. நெல்லை தி. மு. க. கிளை
2. தேனி ,,
3. காமயக்கவுண்டன்பட்டி தி. மு. க. கிளை
4. தச்சநல்லூர் ,,

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

'அறிவகம்', சென்னை.
7—4—55

****

ஆதரவாளரின் கிளர்ச்சியின் துணை கொண்டு சகேதி பிரதம மந்திரியானவர்.

கம்யூனிஸ்டு கட்சி கல கலக்கிறது ?

குண்டூர், ஏப். 6—

ஆந்திரத் தேர்தலில் பெற்ற படுதோல்வி கம்யூனிஸ்டு கட்சிக்கு பெரும் சீர்குலைவைத் தந்துள்ளது என்று கூறப்படுகிறது.

அண்மையில் விஜயவாடாவில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்திற்குப் பின்னர், கட்சித் தோழர்கள் பெரும் குழப்பத்திற்காளாகியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

குண்டூரில் உள்ள பல பிரபல தலைவர்கள் உட்பட ஏராளமான பேர்கள் கட்சியிலிருந்து விலகிவிட முடிவு செய்திருப்பதாக சில பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

காஞ்சி கலை விழா பெற்ற வெற்றி

செயல்முறை ஏற்படுத்தக் குழு

காஞ்சீபுரத்தில் படித்துவரும் உதவி தேவைப்படும் ஏழை மாணவர்களுக்கு உதவும் பெருநோக்குடன் காஞ்சியில், 30—3—55 முதல் 5—4—55 வரை 'கலை விழா' நடைபெற்றது. தி. மு. கழகத் தோழர்களும், அவர்களுக்குப் பெருந்துணையாக பிற கட்சியினரும், அரசியல் பற்றற்றோரும் தங்கள் மனமுவந்த ஒத்துழைப்பைத் தந்துள்ளனர்.

'கலை விழா'வில் பொதுவாக தியாகராயர் கல்லூரிக் கலைக் குழுவினரும், மனோகர் குழுவினரும், சிறப்பாக கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன், டி. ஏ மதுரம், எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர்களும் கருத்து விருந்தும் கலை விருந்தும் ஒருங்கே கூட்டித் தந்ததின் மூலம், இத்தொகை திரண்டிருக்கிறது.

கலை விழாவின் விழுமிய நோக்கத்தை ஒப்பும் வகையில், செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் தோழர் லோபோ பிரபு அவர்கள், முதல் நாள் கலை விருந்தைத் துவக்கிவைத்து, கலைஞர்களையும், ஆதரவுகாட்டிய பொதுமக்களையும் பாராட்டினார். பின்னர் நடைபெற்ற ஒவ்வொரு நாள் நாடகத்திற்கும் முறையே, சுயம்பிரகாசம், ஷண்முகம், தெய்வசிகாமணி, கோவிந்தசாமி முதலிய சட்டசபை உறுப்பினர்களும், காஞ்சி-கல்யாணசுந்தரம், அண்ணாதுரை ஆகியவர்களும் தலைமை ஏற்று, கலைஞர்களைப் பாராட்டினர்.

கலைவிழாவின் மூலம் மொத்தத்தில் ரூ. 5,000 கல்வி நிதிக்காகச் சேர்ந்திருக்கிறது. இத்தொகையை எவ்வகையில் ஏழை மாணவர்களின் கல்விக்காகச் செலவிடுவது என்பதை வரையறுக்கவும், முடிவைத் திறம்படச் செயலாற்றிக் கண்காணித்து வரவும் ஒரு குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது.

அக்குழுவில், கலைவிழாவின் தோற்றத்திற்கும், வெற்றிக்கும் துவக்க முதல் இறுதி வரை ஆர்வத்துடன் பணிபுரிந்தத் தோழர்களில் பெரும் பங்கேற்று உழைத்தவர் சார்பில் தோழர்கள் பாபு, மோகன் ஆகிய இருவரும், காஞ்சி தொகுதி சட்டசபை உறுப்பினரான தோழர் தெய்வசிகாமணி அவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

ரூ. 250 கட்டணம் செலுத்தும் விருப்புடையோர் அனைவருக்கும், அக்குழுவில் உறுப்பினராகும் உரிமை உண்டு. அதன்படி கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் குறிப்பிட்டக் கட்டணத்தைச் செலுத்தி அக்குழுவில் இடம் பெற்றுள்ளார்.

'லோகார்'கள் சபதம் நிறைவேறுகிறது

(இராஜஸ்தான்) சித்தூர், ஏப். 6—

சுமார் 4,000 'லோகார்'கள், தங்கள் முன்னோர், கடந்த 4 நூற்றாண்டுகளாக மேற்கொண்டிருந்த சபதத்தை நிறைவேற்றும் வகையில், இன்று வெற்றி வாகையுடன் சித்தூர் கோட்டைக்குள் புகுந்திருக்கின்றனர்.

வெற்றி முழக்கங்களை வெளியிட்டுக்கொண்டு, மேளவாத்தியங்கள், துந்துபிகள் முழங்க நடந்து சென்ற இவர்களது நீண்ட ஊர்வலத்தை இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் தலைமையேற்று நடத்திச் சென்றார்.

****

தி. மு. கழக பொதுக்குழு

★

தி. மு. கழகப் பொதுக் குழு, சென்னையில் ஏப்ரல் 24-ல் நடைபெற இருக்கிறது.

பொதுச் செயலாளர் தேர்தலும், மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தலும் அன்று முக்கிய நிகழ்ச்சிகள்.

இடம், அடுத்த அறிக்கையில்.

—தி. மு. கழக தலைமை நிலையம்

****

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 7—4—'55 வியாழன்

அதிலுங்கூடவா அலட்சியம் ?

வடநாடு — தென்னுடு — என்று பிரித்துப் பேசுவோர் தொகை வளர்கிறது, வளர் பிறைபோல!

'வடநாடு, தென்னுட்டை அலட்சியம் செய்கிறது — தென்னக மக்களின் ஆசைகளை, கோரிக்கைகளை புறக்கணிக்கிறது — தென்னுட்டின்மீது ஆதிக்கம் கொண்டிருக்கும் ஒரே காரணத்தால்' என்ற உண்மையை உணர்வோர், தமிழ் நாட்டில் மட்டுமின்றி, கேரள, கன்னட, ஆந்திரப் பகுதிகளிலும் ஏராளமிருக்கிறார்கள் என்பதை அண்மையில் வெளிவந்து கொண்டிருக்கும் அடுக்கடுக்கான செய்திகள் செப்பிக்கொண்டு இருக்கின்றன.

முன்பு, கூறுபவர் நாம் மட்டும்தான் என்ற காரணத்தாலேயே, கூறுவனவற்றைக் குறைத்து மதிப்பிட்டு மறுத்துரைத்திட முயன்ற குறைமதியாளர் உண்டு ஏராளமாக! ஆனல் கூறப்பட்டதோ, மறுக்கப்படமுடியாத பேருண்மை! அதனை மூடி மறைக்க, அன்று முயற்சித்தோர் இன்று முக்காடிட்டுக் கொள்ளும் வகையில், வடநாட்டின் ஆதிக்கப் போக்கினை உணர்ந்து, அதனை நினைத்து உளம் நொந்து, தாம் பட்ட வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றும் தோல்வி கண்டு, உளம் தேறி, உண்மை விளம்பும் உத்தமர் தொகை வளர்ந்துகொண்டிருக்கிறது — தினந்தோறும்!

அந்த வளரும் எண்ணிக்கை வரிசையில் இடம் பெறுபவர்களாக, மைசூர் சட்டசபை உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள்.

தென்னகம்—தமிழ், மலையாளம், கன்னடம் ஆந்திரம் ஆகிய மாநிலங்கள், வடநாட்டு ஆதிக்கப் பிடிப்பினின்றும் விடுதலை பெற வேண்டும் என்று நாம் கூறுவதை ஆமோதிக்கும் வகையில் 'வடநாட்டவர், திட்டங்கள் தீட்டி நாட்டை வளமாக்கும் முயற்சியில், தென்னுட்டை முழுவதுமாக மறந்துவிட்டார்கள்—அல்ல அல்ல—அலட்சியப்படுத்திவிட்டார்கள்—மாற்றுந்தாய் மனப்போக்குடன் நடந்துகொள்ளுகிறார்கள்' என்று துணிந்து கூறியிருக்கிறார்கள் மைசூர் சட்ட மன்ற உறுப்பினர்கள்!

மைசூர் மாநிலத்தில் உள்ள சாமராஜ நகருக்கும், சென்னை மாநிலத்தில் உள்ள ஈரோடு நகருக்கும் இடையே ஒரு இரயில் பாதை அமைக்க வேண்டுமென கடந்த பல்லாண்டுகளாகவே மைசூர் மக்கள் விரும்பி வருகின்றனர்.

இரயில்வேக்களின் நிர்வாகத்தை இந்தியப் பேரரசு தனிப்பட்ட வெள்ளையர் கம்பெனிகளிடமிருந்து ஏற்றுக்கொள்ளுமுன் இக்கோரிக்கை தெரிவிக்கப்பட்டபோது, மைசூர் இரயில்வே கம்பெனியார், தங்கள் சொந்தக் கொள்ளை லாபம் கருதி, கோரிக்கையை நிறைவேற்ற மறுத்துவிட்டனராம்.

ஆனல், இந்தியப் பேரரசின் பொறுப்பின் கீழ், இரயில்வேக்கள் நிர்வாகம் வந்தான பிறகும், இக்கோரிக்கை புறக்கணிக்கப்பட எந்தவித நியாயமும் கிடையாது.

இந்தக் கோரிக்கையை, பல தூதுக் குழுக்கள் மூலமாகவும், பேட்டிகள், மனுக்கள் மூலமாகவும், மைசூர் மக்களும் அரசாங்கமும் இந்தியப் பேரரசிற்குத் தெரிவித்திருக்கின்றனர். ஆனலும் இன்றுவரை கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

இந்திய இரயில்வே இலாகா மந்திரியாக காலஞ் சென்ற கோபால்சாமி அய்யங்கார் இருந்த காலத்தில் முறையிட்டபோது அவர் இந்த இரயில்பாதை அமைப்புத் திட்டத்தில் ஆர்வங் காட்டியதாயும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இதனைச் சேர்த்துக்கொள்ள சம்மதித்ததாயும் மைசூர் சட்டசபையில் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்தனைக்குப் பிறகும், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலவரை முடிந்து, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் துவங்கவிருக்கிற இந்த நாள் வரை, இந்தியப் பேரரசு இக்கோரிக்கையைக் கவனிக்கமுன் வரவில்லையாம்.

முதன்மந்திரி அனுமந்தையா கூட, இத்திட்டம் பற்றி மத்திய இரயில்வே மந்திரியிடம் பலமுறை பேசியதாகவும், அவருக்குப் பல கடிதங்கள் எழுதியதாயும், என்றாலும் பலன் என்னவோ, 'இல்லை' என்பது தான் என்றும் கூறியிருக்கிறார்.

இத்தனை ஆண்டுக் காலம் பொறுமையுடன் இருந்து, இந்திய இரயில்வேக்களின் படம் ஒன்றைப் பார்த்து அதில் பலப் பல புது இரயில் பாதைகள் இடம் பெற்றிருப்பதையும் உற்று நோக்கிய பின் தான், 'அங்கு மட்டும் புது இரயில் பாதைகள் — இங்கே ஏன் இல்லை? எத்தனையோ ஆண்டுக் காலமாகக் கேட்கிறோம், அவர்கள் கேளாக் காதர்களாக இருக்கிறார்களே ஏன்?' என்று சிந்தித்து, அதன் பின்னர்தான், வடநாடு, தென்னுட்டை, போக்குவரத்து அபிவிருத்தித் துறையிலும் அலட்சியம் செய்கிறது—தென்னுட்டிடம் வடநாடு, மாற்றுந்தாய் மனப்போக்குடன் நடந்துகொள்கிறது என்ற, வடநாட்டு ஆதிக்கத்தின் விளைவுகளில் ஒன்றினைப் பற்றிய உண்மையைப் புரிந்துகொண்டிருக்கின்றனர், மைசூர் மாநில சட்ட மன்ற உறுப்பினர்கள்.

முன்னாள் மைசூர் மந்திரியான டி. மாரியப்பா என்பவர் உட்பட பல கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும், 'தென்னுட்டு மக்களின் விருப்பங்களை, மத்திய அரசாங்கம் அலட்சியம் செய்கிறது-தென்னுட்டை வடநாடு புறக்கணிக்கிறது — வடநாடு தென்னுட்டிடம், மாற்றுந்தாய்க் கொள்கையுடன் நடந்துகொள்கிறது—மாநில அரசாங்கம், கோரிக்கை நிறைவேற மத்திய அரசாங்கத்திற்கு இந்தக் கருத்தினைச் சுட்டிக்காட்டி அவர்களைத் தட்டிக் கேட்க வேண்டும்—கோரிக்கை நிறைவேற போராட வேண்டும்—வடவரின் போக்கு கண்டு ஆச்சரியப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம்' என்று கனல் கக்கியிருக்கிறார்கள்.

முதன் மந்திரி அனுமந்தையாவும், தன் பங்கிற்கு, "நாம், எல்லோருக்கும் சம உரிமையும், சம சந்தர்ப்பமும் வழங்குகிற அரசியல் சட்டத்தின் கீழ் வாழ்பவர்கள்; எனவே, மத்திய அரசாங்கத்திற்கு உங்களின் குரலை எடுத்துக்காட்டி, கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோருகிறேன். உறுப்பினர்கள் பலர், மத்திய அரசாங்கத்தின் போக்கு குறித்து வெளியிட்ட கருத்துக்கள் எனக்கும் உடன்பாடானவைதான். இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று நீங்கள் எல்லோரும் ஒரு மனதாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை மத்திய அரசாங்கத்திடம் தந்து உரிமையைப் பெற என்னுலியன்றவரை முயற்சிக்கிறேன்" என்று பரணிபாடியிருக்கிறார்.

'ஏக இந்தியா'க்காரர்கள், மைசூர் சட்ட மன்ற உறுப்பினர்களின் உள்ளக் குமுறலை உணர்வார்களோ என்னமோ? ஆனல் தென்னுடு என்னவோ? —கேட்கத் துவங்கிவிட்டது தனது உரிமையை.

"போக்குவரத்து அபிவிருத்தித் துறையிலும் கூடவா டெல்லியால் தென்னுடு அலட்சியம் செய்யப்படவேண்டும்?" என்றுதான், ஒட்டும் உறவும் சிறிதளவேனும் வடநாட்டுடன் வேண்டும் என்று எண்ணுவோர்கூடக் கேட்கிறார்கள் இன்று.

கோரிக்கையை குறிப்பிடவே அஞ்சும் அமைச்சர்!

சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றி வாயே திறக்கவில்லை!

புதுடில்லி, ஏப். 5—

"உற்பத்தி இலாகா மானியக் கோரிக்கை விவாதத்தின்போது; விவசாயத் தொழில் வளர்ச்சித் திட்டங்கள் துவங்கப்படுவதில் தென்னுடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. டில்லி ஆட்சியாளர்கள், ஓரவஞ்சனையாக நடக்கிறார்கள்—சேலத்தில் கிடைக்கும், இரும்புக் கனியை உருக்கிப் பொருளாக்க, தொழிற்சாலை ஒன்றை ஏன் நிறுவக்கூடாது?" என்று கேட்கப்பட்டதற்கு, மத்திய உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி, விவாதத்திற்குப் பதிலளிக்கையில், எந்தவித சரியான பதிலும் கூறமலேயே அதனை மழுப்பிவிட்டிருக்கிறார்.

எஸ். வி. ராமசாமி போன்ற காங்கிரஸ்காரர்கள் எழுப்பிய குரலுக்குக்கூட மதிப்பளித்து, விவாதத்தில் பதிலளிக்கத் தவறிவிட்ட மந்திரியின் போக்குகண்டு, தென்னுட்டு உறுப்பினர்கள் பெரும் ஏமாற்றத்திற்காளாகியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்திய அபிரகம்

புதுடில்லி, ஏப். 4—

அமெரிக்கா இந்தியாவிடமிருந்து வாங்கும் அபிரகத்திற்கு, பிரேசில் நாட்டிலிருந்து வாங்கும் அபிரகத்திற்குத் தரப்படுவதைப் போலவே, அதிகமான விலை தர வேண்டும் என்று, இந்திய அபிரகத் தொழிலதிபர்களிடமிருந்து, இந்திய அரசாங்கத்திற்கு முறையீடு வந்திருப்பதாகத் தெரிகிறது.

கோவா விடுதலைப் போர்

விவரம் பற்றி போராட்டத் தலைவர் விளக்கம்

சவந்தவாடி, ஏப். 5—

"மாநாட்டிற்கு முன்னரேயோ, அல்லது மாநாட்டின் போதோ எதிர்பாராதவிதமாகக் கைது செய்யப்பட்டுவிட்டால், எனது தலைமையுரையை, ஒவ்வொரு வீட்டிலும் படித்துக் காண்பித்து, சுதந்திரத்திற்கான நடவடிக்கைகளையெல்லாம் அகிம்சை முறையில் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். தேசிய வாரத்தைத் தக்கமுறையில் அனைவரும் கொண்டாட வேண்டும்-கோவாவின் இந்தச் சுதந்திரப் போரிலீடுபட்டிருப்பவர்களும் மற்றவர்களும் தங்கள் இலட்சியத்தைக் காண தங்கள் தங்கள் முயற்சிகளையெல்லாம் இரட்டிப்பாக்கிக்கொள்ள வேண்டும்."

—இவ்வாறு, பஞ்சிமிற்கு அருகில் உள்ள மாபுசா எனுமிடத்தில் நடைபெறவிருக்கும் கோவா தேசிய காங்கிரஸ் மாநாட்டுத் தலைவியான திருமதி சுதாபாய் ஜோஷி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

சவந்தவாடியில் கடந்த 4 நாட்களாக முகாம் செய்திருந்த கோவா தேசிய காங்கிரஸ் ஊழியர்கள் 50 பேர் நேற்றிரவு கோவாவிற்குப் பயணமானார்கள். தற்போது கோவா எல்லைக்குள் தேசிய வாதிகள் காலடி எடுத்துவைக்கக் கூடாது என்பதற்காகப் பலத்த போலீஸ், இராணுவ கண்காணிப்புகள் கடந்த ஒருவார காலமாக இருந்து வருகிறதாம்.

இம்மாநாட்டுத் தலைவியரான மேற்படி அம்மையார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் காணப்படுவதாவது:—

"இந்திய மக்களும், இந்திய சர்க்காரும், எங்களுக்குக் காட்டி வரும் அனுதாபத்தை நிறுத்திக் கொண்டு, எங்களை நன்றாகப் புரிந்துகொண்ட பின்னர், இப்போராட்டத்தில் தங்கள் சொந்தப் பொறுப்பை உணரவேண்டுவதோடுபோராட்டத்திலும் அவர்கள் தீவிர பங்கேற்கவேண்டும்."

தகவல் தருவோருக்கு ரூ. 4000 பரிசா?

இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்க இருக்கும் திருமதி ஜோஷி அம்மையாரைக் கைது செய்ய அவரைப் பற்றிய தகுந்த தகவல்களைத் தருவோருக்கு ரூ. நாலாயிரம் பரிசாகத் தர போர்த்துகீசிய சர்க்கார் அறிவித்துள்ளதாம்! சர்க்காரும் அவரைக் கைது செய்ய 'பெருமுயற்சி' மேற்கொண்டுவருகிறதாம்.

தற்போது நடைபெறப்போகிற கோவா தேசியக் காங்கிரசின் மாநாடு குறித்து போர்த்துகீசிய சர்க்கார் வெகுவாகப் பீதியடைந்துள்ளனர் என்று தெரிகிறது. ஒரு நபர் மீது சிறிதளவு சந்தேகம் ஏற்பட்டாலுங்கூட உடனடியாக அவரைக் கைது செய்து சர்க்கார் துன்புறுத்துவதாகவும் கூறப்படுகிறது.

சுங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

"கோவா தேசியவாதிகள் நாடு கடத்தப்படுவதைத் தடுக்கும் விதத்தில், இந்திய சர்க்கார் சுங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று பம்பாயில் நடைபெற்ற கோவா நடவடிக்கைக் குழு தனது கூட்டம் ஒன்றில் பிரதமர் நேருவைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

"இத்தகைய நாடுகடத்தல்களை நிறுத்தாமல் போர்ச்சுகீசிய சர்க்கார் தொடர்ந்து மேற்கொண்டு செய்துகொண்டே போனல் அதனல் ஏற்படும் விளைவுகளை போர்ச்சுகீய சர்க்கார் அனுபவிக்க நேரிடும்" என்று போர்ச்சுகீசிய சர்க்காருக்கு எச்சரிக்கை விடுத்து, அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக செய்தி ஒன்று அறிவிக்கிறது.

அரிசனங்களை கோவிலிலிருந்து வெளியேற்றியதாக வழக்கு!

சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு

சென்னை, ஏப். 5—

"முதன் முதலில் குற்றஞ்சாட்டப்பட்டபோது, கோவில் 'டிரஸ்டி'கள் கோவிலை விட்டு அரிசனங்கள் உடன் வெளியேற வேண்டுமெனக் கூறியதாக, அவர்களிடம் சிலர் வந்து சொன்னதாகப் புகார் செய்யப்பட்டிருக்கிறது. இது, குற்றஞ்சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளவர்கள் நேரிடையாக, அரிசனங்கள் கோவிலை விட்டு வெளியேறுமாறு கூறவில்லை என்பதைக் கூறுகிறது. 'டிரஸ்டி'கள் கூறியதாக, அரிசனங்களிடம் வேறு யாரோ வந்து கூறியிருக்கிறார்கள். எனவே அத்தகு கூற்றுக்கள் சாட்சியங்களாக ஏற்கப்பட முடியாதவை. அத்தகைய சாட்சியத்தினைக்கொண்டு தரப்பட்ட தண்டனையும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல,"

—என்று, நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், வழக்கொன்றில் தீர்ப்புக் கூறுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திருப்பாம்பரம் எனும் ஊரில் உள்ள சேஷபுரீஸ்வரசாமிகோவில் 'டிரஸ்டி'களான முத்துசாமி, முத்துவேலு என்ற இருவரும், பிப்ரவரி 8-ந் தேதியன்று கோவில் பிரகாரத்துள் நடைபெற்ற பாட்டுக் கச்சேரி ஒன்றின்போது, அங்கிருந்த அரிசனங்கள் சிலரை, வெளியேறிவிடவேண்டுமென்று கூறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மாயூரம் உப பிரிவு நீதிமன்றத்தால் தலா ரூ. 50 அபராதம் தண்டனை விதிக்கப்பட்டனர்.

இந்த தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டது. அந்த அப்பீல் வழக்கில்தான், குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டது.

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில்.....

ரூ. 1,100 கோடியில் நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்களாம்

புதுடில்லி, ஏப். 5—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், மேலும் 150 லட்சம் ஏகர் சாகுபடிக்கான நீர்ப்பாசன வசதிகளுக்கும், 30 முதல் 35 - லட்சம் கிலோவாட் மின்சாரம் வரை உற்பத்தி செய்யவும், வழிவகைகள் செய்யப்படும்,"

என்று, திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா, டெல்லி மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

இந்தத் திட்டங்களுக்காக சுமார் 1,100 கோடி செலவாகுமெனக் கணக்கிடப்பட்டிருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

பட்டம் தாணு பொய்யராகிருர்!

பண்டித நேரு மீது சுமத்திய குற்றச்சாட்டை மறுப்பாரா?

திரு-தமிழக வழக்குகளில் தான் தலையிடவில்லை என பண்டிதர் கடிதம்

புதுடில்லி, ஏப். 5—

திரு. தமிழக காங்கிரசார் மீது தொகுக்கப்பட்டுள்ள வழக்குகளை, திரும்பப் பெற வேண்டாம் என்று பிரதமர் பண்டித நேருதான் தனக்குக் கூறியதாக பட்டம் தாணுப்பிள்ளை, திரு-கொச்சி சட்ட சபையில் இரண்டு வாரத்திற்கு முன்பு கூறியிருந்ததை, 'பண்டித நேரு அவ்வாறு கூறவில்லை' என்று, அகில-இந்திய காங்கிரஸ் செயலாளர் மாதவன் நாயர், நேருவின் மறுப்புக் கடிதங்களைப் பிரசுரித்து, அறிக்கை வெளியிட்டிருக்கிருர்.

திரு—கொச்சி ம. சோ. கட்சிச் செயலாளரால் வெளியிடப்படும் வார இதழ் ஒன்றில்,'பண்டிதநேரு பட்டம் தாணுவைக் காட்டிக் கொடுத்தார்' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ள கருத்தினை மறுத்து எழுதுமாறு பண்டிதநேரு பட்டம் தாணுவுக்கு கடிதம் வரைந்தார். பட்டம் தாணு கடிதம் கிடைத்ததாகக்கூட பதில் எழுதவில்லை. பின் மீண்டும் பண்டிதர் கடிதம் வரைந்தார். ஆனாலும், பட்டம், மறுப்புச் செய்தி வெளியிடவில்லை. அதன் பிறகே பண்டிதருக்காக, பொதுச் செயலாளர் மாதவன் நாயர், கடிதங்களை வெளியிட்டு மக்களுக்கு உண்மை நிலையை உணர்த்துவதற்காக அறிக்கை வெளியிட்டுள்ளாராம்

பண்டித நேரு, மார்ச் 10-ந் தேதியிட்ட தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது:—

"இந்த தலையங்கம், 'பண்டிதர் பட்டத்தைக் காட்டிக்கொடுத்தார்;' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. திரு. தமிழ் நாடு காங்கிரசுடன் நீங்கள் சமரசத்திற்கு வரமுடியாதவாறு தந்திரமாக உங்களுக்கு சதியோசனை கூறியதாகவும், அந்த தலையங்கம் கூறுகிறது;

"கடந்த அக்டோபர் 2-ல் நான் கொச்சி வந்தபோது, தி. த. நா காங்கிரசுடன் சமரசத்திற்கு வரப் போவதாக, என்னிடம் நீங்கள் கூறியதாகவும், நான் அதனை கடுமையாக எதிர்த்ததாகவும், பின் நீங்கள் என் யோசனையை ஏற்றுக் கொண்டதாகவும், அத்துடன் சமரசத்திற்கான முயற்சிகள் முடிவடைந்தனவென்றும் அதில் கூறப்பட்டிருக்கிறது.

"எனவே, நான் துரோகம் இழைத்ததாகக் குற்றஞ்சாட்டப் பட்டிருக்கிறேன்.

"இத்தகைய முட்டாள் தனம், உங்களிடமிருந்து வந்ததென என்ருல், கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை.

"எப்போதும் நான் எந்தவித உடன்பாட்டையும் எதிர்ப்பவனுயிருக்கவில்லை.

"நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருந்த உங்கள் அரசாங்க வேலைகளில் நான் குறுக்கிட விழைந்ததே இல்லை; என்னைப் பொறுத்தவரையில், நான் எவ்வளவு சரியாக நடந்துகொள்ள முடியுமோ அவ்வளவு சரியாக நடந்துகொண்டிருக்கிறேன்.

"அங்கு போலீசார் தவருக நடந்து கொள்வதாகக் கேள்விப் பட்டது பற்றி நான் உங்கட்கு பலமுறை கடிதங்கள் எழுதியிருந்தேன்.

"உங்களுக்குத் தெரியும்—நான் ஒருபொழுதும் உங்கள் மந்திரி சபை வீழவேண்டுமென விரும்பியவனல்ல என்பது. இந்த நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக, எனது சக்திக்கேற்ற அளவு முயன்றிருக்கிறேன்

"எனவே, நீங்கள், உடன் 'பிரவாகம்' என்ற இதழில் உங்கள் மறுப்பினை வெளியிடுவதுதான் உங்களுக்கும் எனக்கும் நல்லது."

இந்தக் கடிதத்திற்கு பதில் ஏதும் வராது போகவே, கடந்த மார்ச். 24-ந் தேதியன்று, உடன் மறுப்பறிக்கை வெளியிடுமாறும், அல்லது, கடிதங்களைப் பிரசுரிக்குமாறும் கோரி பட்டம் தாணுவுக்கு பண்டிதர் கடிதம் எழுதியிருக்கிருர்.

சென்னைக்கு மேலும் 75 புதிய பஸ்கள்?

சென்னை, ஏப். 5—

இந்த நிதி ஆண்டிற்குள்ளாகவே சென்னை பஸ் போக்குவரத்துக்கான வசதியை அதிகரிக்க மேலும் 75 'லேலண்ட்' ரக பஸ்கள் சேர்க்கப்படும் என்று தெரிகிறது. தற்போது சென்னைநகரில்'லேலண்ட்' ரகத்தைச் சேர்ந்த 26 வண்டிகள் ஓடுகின்றன.

சேர்க்கப்பட இருக்கும் 75 புதிய பஸ்களில், 25 பஸ்கள் வருகிற ஜூன் திங்கள் இறுதிக்குள்ளாகவே பொதுமக்களின் உபயோகத்திற்கு வந்துவிடும் என்றும், பாக்கி 50 பஸ்களும் அடுத்தஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்குள் கொண்டுவரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது நகரில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கும் 'ஓட்டை உடைசல்' பஸ்களுக்குப் பதிலாகத்தான் அவை கொண்டுவரப்படுகின்றன என்றும், இவை ஒவ்வொன்றிலும் 65 பேர்கள் வரையிலும் ஒரே நேரத்தில் பிரயாணம் செய்யலாமென்றும் சென்னை போக்குவரத்து அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

மேலும் இன்னுமொரு அரை மாடி 'விஜய' வண்டி தயார் செய்யப்பட்டு வருவதாகவும், அநேகமாக இத்திங்கள் இறுதிக்குள்ளாகவேகூட நகரில் ஓட ஆரம்பிக்கும் என்றும் அவ்வதிகாரி கூறியிருக்கிருர்.

நேபாளத்தில் பஞ்சம்

பண்டிதரின் தாராள உதவி

நேபாளத்தில் நிலவும் பஞ்சத்தினுல் பாதிக்கப்படுபவர்களுக்கு உதவுவதற்கு இந்தியப் பேரரசு முன்வந்திருக்கிறது.

சுமார் 10,000 டன் அரிசி அனுப்பப்பட்டுள்ளது. நாட்டின் பல பாகங்களுக்கும் அரிசியை எடுத்துச்செல்வதற்கான, போக்குவரத்து வசதியும் தரப்பட்டுள்ளதாம்.

மேலும் சில பகுதிகளில்காலரா, அம்மை போன்ற நோய்களும் பரவ ஆரம்பித்துள்ளனவாம். இதற்கான மருத்துவ வசதிகளும் தர இந்தியப் பேரரசு ஏற்பாடு செய்கிறதாம்.

துயர் துடைப்பதற்காக, பண்டித நேரு, தேசீய நிவாரண நிதியிலிருந்து ரூ. 50,000 அனுப்பியிருப்பதாகவும் தெரிய வருகிறது.

'இந்தியர் மயம்'ாக்கும் ஏற்பாடு முன்னேற்றம்

தரைப் படை, விமானப் படை, கப்பல் படை ஆகிய பாதுகாப்புப் படைகள் 'இந்தியர் மயம்'ாக்கப்படுவதில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளதாக உதவி பாதுகாப்பு அமைச்சர் டில்லி பாராளுமன்றத்தில் கூறியிருக்கிருர்.

அவர் கூறியுள்ள புள்ளிவிவரப்படி, சென்ற 1949-ம் ஆண்டில். தரைப் படையில், 410 பிரிட்டிஷார் உள்பட 478 வெளிநாட்டு அதிகாரிகள் இருந்ததாகவும், ஆனுல், இவ்வாண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில் மொத்தமாக வெளிநாட்டு அதிகாரிகள் 15 பேர்கள்தான் என்றும் தெரிகிறது

இதுபோலவே கடற்படையிலும் சென்ற 1949-ம் ஆண்டில் இருந்த அதிகாரிகளின் எண்ணிக்கையான 129 பேர், இப்போது 33 பேர்களாகக் குறைந்துவிட்டது.

இது தவிர, விமானப் படையிலும் தற்போது 3 தொழில் நுணுக்க அதிகாரிகளும், 22 சிவிலியன் பயிற்சியாளர்களாகவும்தான் அயல் நாட்டினர் இருக்கின்றனர் என்றும் அமைச்சர் மேலும் கூறியிருக்கிருர்.

ஆசிரியர்தம் அரும்பணி

கல்வி இலாகாத் தலைவர் தரும் நல்லுரை

"கல்வி முறைகளில் காலத்திற்கேற்றவாறு மாற்றிப் போதிக்க ஆசிரியர்களெல்லோரும் முன்வர வேண்டும்; அவர்களெல்லோரும் 'ஏழை — பணக்காரன்' என்ற வித்தியாசம் எதுவும் காட்டாமல் கல்வி போதிக்கவேண்டும்; ஒவ்வொரு ஆசிரியரும் தத்தம் பொறுப்புகளை உணர்ந்து, கல்வி நிலையின் தரம் உயர உழைக்க வேண்டும். இன்றைய நாட்டில் புதிய ஒரு சமுதாயம் உருவாக வேண்டுமானுல், அது ஆசிரியர்களின் கையில் தானிருக்கிறது" இவ்வாறு, விருதுநகர் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சங்கச் சார்பில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சென்னை மாநில கல்வி இலாகா டைரக்டர் நெ. து. சுந்தரவடிவேலு குறிப்பிட்டிருக்கிருர்.

சர்க்காரும்,ஆசிரியர்களின்குறைகளை உணர்ந்து, காலாகாலத்தில் அவற்றைக் கவனித்து ஆவன செய்வர் என்றும் அவர் கூறிஞர்.

ஆசிய மாநாடு ஆரம்பம்

புதுடில்லி, ஏப். 5—

18 ஆசிய, அராபிய நாடுகளின் அதிகாரப் பற்றற்ற மாநாடு ஒன்று இன்று இங்கு கூடுகிறது.

அவை ஆசியக் கொள்கையான 'பஞ்ச சீல'க் கொள்கைகளுக்குத் தெளிவான ஆதரவு காட்டும் என்று கூறுகிறது.

அந்த மாநாட்டில் எகிப்து முதல் ஜப்பான் வரையுள்ள பிரதேச நாடுகள் பலவும் பங்கு பெறுகின்றன.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள 25 நாடுகள் அழைக்கப் பட்டிருந்தன என்றும், ஆனுல் 18 நாடுகள் மட்டுமே கலந்துகொள்ளச் சம்மதித்தன என்றும் தெரிய வருகிறது.

தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், கம்போடியா, மலாயா ஆகிய நாடுகள் கலந்துகொள்ளாது ஒதுங்கி நின்றுவிட்டனவாம்.

திருமணங்கள்

8—4—55 சென்னை சேத்துப் பட்டு தோழர் ஆர். கோவிந்தராசன்—தோழியர் சி. எ. ஊர்துமரி திருமணம் தோழர் சண்முகம் தலைமையில் நடைபெற்றது. சுயமரியாதைத் திருமணம் குறித்துத் தோழர்கள் என். ஜீவரத்தினம், எழுமலை, முத்துராமன், செல்வப் பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப் பட்டது—வரப்பெற்ருேம்-நன்றி—பொறுப்பாளர்.

* * *

நாகூர் தி மு. கழகத் தோழர் நா. செல்வராசு-தோழியர் ஆனந்த வல்லி திருமணம், 30—3—55 காலை 8 மணியளவில், பாபஞசத்தில், தோழர் டி. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி. ஐம்பு, ராஜகிரி, கோவிந்தராசன் ஆகியோர் 'திருமணம்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். மறுநாள் மாலை நாகூரில் மணமகன் இல்லத்தில் வரவேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்ருேம்-நன்றி—பொறுப்பாளர்

* * *

குனியமுத்தூர் தி. மு கழகத் தோழர் மு. இராமசாமியின் மகள் தோழியர் ருக்குமணியம்மை—தோழர் தட்சிணுமூர்த்தி திருமணம், 30—3—55 காலை 8 மணியளவில் தோழர் எம். சதாசிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சுந்தராசன், மருதவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தலைமைக் கழகம்: அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
செங்கற்பட்டு	10—4—55	மாலை 2½ மணி	'திராவிட நாடு' அலுவலகம், காஞ்சிபுரம்	அ. பொன்னம்பலனுர்
வட ஆற்காடு	10—4—55	மாலை 2 மணி	தி. மு. கழக அலுவலகம், ஆம்பூர்	என். வி. நடராசன்
தஞ்சை	10—4—55	காலை 10 மணி	நாடார் சத்திரம் இரயிலடி, மாயவரம்	சத்தியவாணிமுத்து
மதுரை	10—4—55	மாலை 3 மணி	விக்டோரியா எட்வர்டு ஹால், மதுரை	இரா. நெடுஞ்செழியன்
இராமனுதபுரம்	10—4—55	மாலை 3 மணி	நாடார் பரிபாலன சங்கம், விருதுநகர்	தில்லை வில்லாளன்
நெல்லை	10—4—55	காலை 10 மணி	தி.மு. கழக அலுவலகம், கன்னம்மன் கோயில் தெரு, நெல்லைச் சந்திப்பு	ஏ. பி. தருமலிங்கம்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்', இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்', கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்', என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்", சென்னை
4—4—'55

சி. என். அண்ணுதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

வடவர் ஏகாதிபத்தியத்தின் ஓரவஞ்சனைக்கு ஒரு அத்தாட்சி!

'டிராக்டர்' இறக்குமதி

சென்ற ஆண்டில் 2·16 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 2,649 டிராக்டர்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டது என்று டெல்லி மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பு :— "கனரகத் தொழில்கள் இல்லாமல் எந்த ஒரு நாடும் தனது சுதந்திரத்தைக் காப்பாற்றவோ, பலப்படுத்திக்கொள்ளவோ முடியாது; இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் அடிப்படையில் மூலாதாரத் தொழில்களுக்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்படும்; ஆனால் அத்தொழில்களில் அபிவிருத்தி ஏற்பட விவசாயத் துறையைப் பலப்படுத்த வேண்டியதும் மிக அவசியமாகும்" என்று பிரதமர் நேரு பண்டிதர் அண்மையில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நெல் அரைக்கும் ஆலைகளுக்கு அனுமதி இல்லை!

★

நெல் அரைக்கும் இயந்திரங்களுக்கு இனிமேல் புதிதாக லைசென்ஸ் வழங்குவதில்லை என்று சென்னை மந்திரி சபை முடிவு செய்துள்ளது.

கைக்குத்தல் அரிசிக்கு பொது மக்கள் பெருத்த ஆதரவு தர ஊக்கமளிக்கும் வகையிலேயே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

இது தவிர, கைக்குத்தல் அரிசிக்கு இன்னும் மேற்கொண்டு என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் கவனிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

தமிழ் ஆட்சி - மொழியாக....

மந்திரி சுப்பிரமணியம் கூறும் யோசனை

"கலைச் சொற்களுக்குச் சரியான புதிய தமிழ்ச் சொற்களைத் தமிழ் எழுத்தாளர்கள் கண்டுபிடித்ததும், தமிழ் மொழி, அரசாங்க மொழியாகவும், கல்லூரி போதனை மொழியாகவும் ஆகிவிடும்,"

என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம், மதுரை தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

"கலை, விஞ்ஞானச் சொற்களுக்குத் தக்க தமிழ்ச் சொற்கள் காண்பது கடினம் என்று ஒரு சில எழுத்தாளர்கள் கருதிக் கொண்டிருப்பது தவறாகும். அவர்களது சந்தேகத்தை நீக்குவதே தமிழ் எழுத்தாளரின் முதற்கடமையாக இருக்க வேண்டும்."

"அதுபோலவே, மற்ற மொழிகளிலிருந்து தமிழ் மொழி, சொற்களை எடுத்தாள்வது கூடாது என்று கூறுவதும் தவறு. தமது சொந்தத் தாய்மொழியில் பற்றும், நம்பிக்கையுமில்லாமல், அதன் வலிமையில் சந்தேகமுள்ளவர்கள் தான் அவ்வாறு நினைப்பார்கள்.

"தமிழ் மொழி பிற மொழிகளிலிருந்து நூற்றுக்கணக்கான சொற்களை எடுத்தாண்டு கொண்டாலுங்கூட அது, உயிருடனேயே திகழும் என்பதை இளம் எழுத்தாளர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்."

இவ்வாறு கூறிய அமைச்சர், இதற்கு எடுத்துக்காட்டாக ஆங்கில மொழியைக் குறிப்பிட்டு, பல மொழிகளிலிருந்தும் சொற்களைத் தன்னகத்தே எடுத்துக் கொண்டாலுங்கூட அது வலிமையுடன் விளங்குவதைச் சுட்டிக்காட்டினார்.

மூன்றுவது பெரும் உருக்கு தொழிற்சாலை

மேற்கு வங்கத்தில் நிறுவ முடிவு

புதுடில்லி, ஏப். 5—

பிரிட்டிஷ் உருக்குத் தொழில் நிபுணர் குழு இந்திய அரசாங்க பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக, துர்காபூரில், தொழிற்சாலை துவங்கப்பட முடிவாகிவிட்டதாகத் தெரிகிறது.

தொழிற்சாலையில் உருக்கப்படும் இரும்பினை, எந்த எந்தப் பொருள்கள் தயாரிக்க உபயோகிப்பது என்பது பற்றியும் ஏறத்தாழ முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டனவாம்.

நிபுணர் குழு, கல்கத்தா சென்று அங்கு மூன்று வார ஆராய்ச்சிக்குப் பிறகு, தொழிற்சாலை நிறுவுவது பற்றிய தனது அறிக்கையை தாக்கல் செய்யும் என்று தெரிகிறது.

மாநிலங்களுக்கிடை விற்பனை வரி

டில்லி வியாபாரிகள் எதிர்ப்பு

மக்கள் சபை முன் ஆர்ப்பாட்டம்

புது டில்லி, ஏப். 6—

பல மாநிலங்களுக்கிடையே விற்பனை வரி விதிப்பதை எதிர்த்து டில்லி மக்கள் சபை முன், டில்லி நகரில் உள்ள சுமார் 20,000 வியாபாரிகள் தகாத ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்று தெரிகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள வரி விதிப்பால் தங்களுக்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களை நிதி மந்திரி தேஷ்முக் அவர்களிடம் எடுத்துக் கூறுவதற்காகவே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

சுமார் ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக அவர்கள் கோஷங்கள் எழுப்பினராம்.

நிதி மந்திரி சபையில் இல்லை என்று தெரிந்ததும், தாங்கள் கொண்டு வந்திருந்த மனுக்களின் நகல்களை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராமன், மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஏ. கே. கோபாலன் ஆகிய இரு மக்கள் சபை உறுப்பினர்களிடமும் தந்துவிட்டு அமைதியாகக் கலைந்து சென்றனராம்.

சாலையில், நகரத்தில் உள்ள முக்கிய கடைவீதிகள் எல்லாம், வர்த்தக சங்கங்களின் கழக வேண்டுகோளுக்கிணங்க இந்த வரி விதிப்பை எதிர்க்கும் நோக்கத்துடன் மூடிக் கிடந்தனவாம்.

சேராதே!

அணுகுண்டுகளைத் தடை செய்ய வேண்டுமென்று கையெழுத்து வாங்கும் இயக்கத்தவர்களுடன் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளக் கூடாதென இந்தியப் பிரதமர் நேரு, காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

வருகிற புதன்கிழமையன்று டில்லியில் நடைபெறவிருக்கும் உத்தியோக சார்பற்ற ஆசிய மாநாட்டினால், இந்திய சர்க்காருக்கு 'தர்ம சங்கட'மான நிலை ஏற்பட்டுள்ளதெனவும் அவர் கூறினாராம்!

திருமதி ஜோஷி கைதானர்

சவந்தவாடி, ஏப். 6—

நேற்று இரவு, கோவா தேசீய காங்கிரஸ் மாநாட்டுத் தலைவியர் திருமதி ஜோஷி அம்மையாரை போலீசார் கைது செய்துவிட்டதாகத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

(முன்னர் வந்த விவரம் 2-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது)

கழகக் கூட்டங்கள்

★

சாத்தூர்

9—4—55 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். எஸ். தென்னரசு
ஆர். பி. சன்யாட்சென்
ஜி. ஏ. எஸ். சுந்தரம்

★

குடந்தை

ஜூப்ளி பூங்காவில்
9—4—55 மாலை 6 மணிக்கு
தலைவர் : கோ. நாராயணசாமி

பேசுவோர்:
கே. கே. நீலமேகம்
எல். டி. கிட்டப்பா
சத்தியவாணிமுத்து

பெங்களூர் மாவட்ட தி.மு.க. அவசரக் கூட்டம்

9—4—55 மாலை 2 மணிக்கு, பெங்களூர் மாவட்ட தி. மு. கழக மாவட்டக் குழு, மாவட்ட அலுவலகத்தில் (பிளாக்பள்ளி) தோழர் கி. மனோகரன் முன்னிலையில் நடைபெறும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நூற்றாண்டு விழா

9—4—55 காலை 10 மணிக்கு, பெங்களூர் தண்டு, கேவல்ரி ரோட், திருமதி அன்னவசந்தி சங்கத்தில், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களது நூற்றாண்டு விழா திரு. தண். கி. வேங்கடாசலம் தலைமையில் நடைபெறும். தோழர் கி. மனோகரன் பேசுவார்.

வள்ளுவர் மன்றம்

9—4—55 மாலை 5 மணிக்கு, திருச்சி, கருணாநிதி பூங்காவில், மேற்படி மன்றத்தின் முதலாவது ஆண்டு விழா, திரு என்.ஜே.தேவதாஸ் தலைமையில் நடைபெறும் தோழர்கள் சி. பி. சிற்றரசு, அன்பில் ஏ. தருமலிங்கம் ஆகியோர் பேசுவர்.

திருவள்ளுவர் நூல் நிலையம்

9—4—55 மாலை 7 மணிக்கு, மானாமதுரையில், மேற்படி நூல் நிலையச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், கே. எஸ் சந்தானம் ஆகியோர் பேசுவர்.

பாரதிதாசன் விழா

9—4—55 மாலை 5½ மணிக்கு புதுக்கோட்டை, ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் திடலில், மேற்படி விழா திரு. பி. எஸ். குப்புசாமி(அய்யர்) தலைமையில் நடைபெறும். திரு. கோவை இளஞ்சேரன், திரு. கரும்பாயிரம் ஆகியோர் பேசுவர். அது போது, 'வீரத்தாய்', 'கவிஞன் பாதை' என்ற சிறு நாடகங்கள் நடைபெறும்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

எப்ரல்: 8: மாலை 3 மணி— மகாதானபுரம் ; மாலை 6 மணி— புதுப்பட்டி
9: நாச்சியார்கோவில்
10: ஆம்பூர் — பகல் 2 மணி: மாவட்டத் தேர்தல்; மாலை 6-30 மணி: பொதுக்கூட்டம்
11: புலவனூர்
15: பெண்ணாடம்
16: மன்னார்குடி
17: சென்னை, புளியந்தோப்பு—பொதுக் கூட்டம்
18: சென்னை, பெத்து நாயக்கன்பேட்டை

நகரசபைத் தலைவர்களுக்கு அதிக அதிகாரம்

நகரசபைத் தலைவர்களுக்கு (சேர்மென்) அதிக அதிகாரம் வழங்குவதென சென்னை அமைச்சரவை முடிவு கட்டியிருப்பதாகத் தெரிய வருகிறது.

மார்வாரி, குஜராத்தி கூச்சலுக்கு சென்னை மந்திரி சபை பணிவு

விற்பனை வரி கணக்குகளை எந்த மொழியிலும் வைத்துக் கொள்ளலாமாம்!

விற்பனை வரி பற்றிய கணக்குகளை இந்திய அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 14 மொழிகளுள் எதிலாவது ஒன்றில் வைத்துக்கொள்ளலாம் என்ற சலுகையை அளிப்பதென சென்னை மந்திரி சபை முடிவு செய்திருக்கிறது.

தற்போதைய சென்னை மாநில விற்பனை வரிச் சட்டப்படி ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகியவற்றில் தான் அக்கணக்குகள் வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

சட்டம் என்ன செய்கிறது?

தாழ்த்தப்பட்டோர் நுழைய முடியாமல் கோவில்களை மூடிய கொடுமை

குவாலியர், ஏப். 6—

'மகாவீர் ஜெயந்தி'யை ஒட்டி அரிசனங்களின் ஊர்வலம் ஒன்று திகம்பர ஜெயின் கோவில்களுள் நுழைய முயன்றபோது, தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், கோவில் கதவுகள் மூடப்பட்டதாகவும் தகவல் தரப்பட்டுள்ளது.

கோவில் அதிகாரிகளின் போக்கை எதிர்த்து, ஊர்வலத்தினர், நகரின் முக்கிய வீதிகள் வழியாகக் குரல் எழுப்பிக் கொண்டே சென்றனர் என்றும் தெரிய வருகிறது

ஊர்வலத்தில் மத்திய பாரத் சட்டசபையில் உள்ள காங்கிரஸ் அரிசன உறுப்பினர்களும் இருந்தனராம்.

மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில், கோவில் அதிகாரிகளின் போக்கு வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

நிதி மந்திரி சுப்பிரமணியம் தலையில்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

ஏரிய மொழிகள் ஏதேனும் ஒன்றைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்றும் கோரப்படும்.

இவை, இந்தி மொழியை நாட்டின் தேசீய மொழியாக அமுலாக்குவதற்கு டெல்லி ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருக்கிற பல்வேறு முயற்சிகளில் ஒன்று.

இந்தத் திட்டத்தைக் கொண்ட கடிதங்கள் இந்தியாவில் உள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பப்படுவதற்காக பல்கலைக் கழக போர்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற தகவலை மத்திய அரசாங்க உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

ஐ. ஏ. எஸ்., மற்றும் முதல்தர இந்திய சர்வீஸ்களுக்கான போட்டிப் பரீட்சைகளை இந்தி மொழியிலேயே நடத்தவேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளில் இது முக்கியமானதாகும்

பல்வேறு பல்கலைக் கழகங்களும், இத்திட்டம் பற்றிய கருத்தறிவிக்குமாறு கோரப்பட்டிருக்கின்றனவாம்.

[......கடந்த மார்ச் 28-ந் தேதியன்று சட்டசபையில் சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், அகில இந்திய சர்வீஸ்களுக்கான பரீட்சைகளுக்கு இந்தி மொழி மட்டும் பரீட்சை மொழியாகத் திணிக்கப்படுவதை சென்னை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார் மேலும் காங்கிரஸ் இதுபற்றி, போட்டிப் பரீட்சைகளில் வட்டார மொழிகளும் இடம் பெறவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாயும், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அமுல் செய்யப்படும் என்று தான் நிச்சயமாக நம்புவதாயும் அவர் கூறியிருப்பதும் இங்கு நினைவில் கொள்ளத் தக்கது.

ஷேக் அப்துல்லா பண்டிதரை வினவுகிறார்

பண்டித நேருவுக்கு, காஷ்மீர் சிறையிலிருக்கும் ஷேக் அப்துல்லா தந்தி ஒன்று அனுப்பியுள்ளாராம்.

வெளிநாட்டிலாகா மானியக் கோரிக்கை மீது பேசிய பண்டித நேரு, 'தான் செய்த தவறுகள்,' என்று குறிப்பிட்டது பற்றி விளக்கம் தருமாறு தந்தியில் ஷேக் அப்துல்லா கோரியிருக்கிறாராம்.

பண்டிதர் கொண்டுள்ள அன்பு, மரியாதை இவற்றிற்கு நன்றி செலுத்தியுள்ள ஷேக், இருந்த சூழ்நிலையைத் தெளிவாக ஒளிவு மறைவின்றிக் கூறியதைத் தவிர, தான் வேறெந்தத் தவறும் செய்யவில்லை என்று பண்டிதருக்கு தந்தியில் விளக்கம் தந்திருக்கிறாராம்.

நகர சபை தேர்தல்கள்

இந்த ஆண்டு நடைபெறும்

சென்னை மாநிலத்திலுள்ள 61 நகர சபைகளிலும், அடுத்துவரும் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் தேர்தலை நடத்திவிடுவது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

இத் தேர்தல் திட்டம், நவம்பர் திங்கள் முதல் தேதியன்று புதிய நகர சபை தனது பொறுப்பேற்குமாறு அமையுமாம்.

எல்லா நகர சபைகளையும் சேர்த்து, மொத்தத்தில் 1,616 இடங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டியிருக்கும்.

சென்னை நகர சபையில் 78 உறுப்பினர்களும், 3 ஆல்டர்மென்கள் உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பாக். பிரதமரின் இரண்டாம் திருமணம்

கராச்சி, ஏப். 6—

பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி தனது காரியதரிசியாக இருந்த அலியாசாதி என்ற பெண்மணியை இரண்டாம் தாரமாக மணந்து கொண்டிருக்கிறார்.

திருமதி சாதி ஒரு கன்னடியப் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

எப்ரல் 9: கும்பகோணம்
10: மாயூரம்—காலை: தஞ்சை மாவட்ட தி. மு. க. தேர்தல்; மாலை: பொதுக் கூட்டம்
11: நெடுங்குளம்
12: இராதாநரசிம்மபுரம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என், அண்ணாதுரை, எம்.ஏ.